**<u>மாங்காடு நகராட்சி</u>**
**<u>நகர்மன்ற சாதாரணக்கூட்டம்</u>**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27.09.2023 ம் நாள் புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு மாங்காடு நகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்.

| | |
|---|---|
| நகராட்சி அலுவலகம், | **நகர் மன்ற தலைவர்** |
| மாங்காடு | **மாங்காடு நகராட்சி.** |
| நாள்.21.09.2023 | |

---

**குறள்:** இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் ஜுலை 2023 மற்றும் ஆகஸ்ட் 2023 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜுலை 2023 மற்றும் ஆகஸ்ட் 2023 மாதங்களுக்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

மாங்காடு நகராட்சி பகுதியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இந்நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் பூங்கா மற்றும் குளம் மேம்பாடு பணிகள் முடிவடைந்ததை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நகர மன்ற தலைவர் நகர மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் முன்னிலையில் 24.07.2023ம் தேதியில் திறக்கவுள்ளதால் பட்டூர்குளம், திருக்குளம், திருவள்ளுவர் சிட்டி பூங்கா, ஏ.ஆர்.நகர் பூங்கா மற்றும் மாருதி என்கிளேவ் பூங்கா போன்ற பணிகள் திறந்து வைக்கப்பட்டது இதற்கான செலவினத் தொகை ரூ.60,000/– பொது நிதியில் மேற்கொண்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அவசர அவசியம் கருதி முடிக்கப்பட்ட பணிகளை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் நேர்வில் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிகள் மற்றும் செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்படும் 2022–2023ஆம் ஆண்டிற்கு தணிக்கை அறிக்கைக்கு இயல்புநிலை ஆண்டு கணக்குகள் குறித்த அறிக்கை தயாரிக்கவும், மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு தேவையான கணக்குகள் குறித்த அறிக்கை தயாரித்து, அளித்திட கன்சல்டென்ட் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ.2.00லட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19ல் மாங்காடு காமாட்சியம்மன் கோயில் அருகில் இயங்கும் நவீன கட்டண பொதுக்கழிப்பிடத்திற்கு குத்தகை காலம் 31.03.2022 –ல் முடிவடைந்தது அவ்வமயம் கொரோனா பெருந்தொற்று (COVID –19) காரணமாகவும், மாங்காடு நகராட்சி தரம் உயர்த்தப்பட்ட காரணத்தினாலும் அடுத்த ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர இயலவில்லை. எனவே 01.04.2023 முதல் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை திரு. ச.வெங்கடேசன் என்பவருக்கு அதே விலை விகித அடிப்படையில் குத்தகை நீட்டித்து வழங்கியதை மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குத்தகை உரிமத்தை நீட்டித்து உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.7**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் தலா 2 கூட்டங்கள் வார்டு மற்றும் பகுதி சபா கூட்டங்கள் நடத்த தேவையான நோட்டு புத்தகங்கள் சப்ளை செய்ய இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண்.671/2022/அ1, நாள்.04.08.2023–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் பின்வரும் நிறுவனங்கள் விலைப்புள்ளி அளித்துள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | சப்ளை பொருள் விவரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.கெக்சிங் சர்வீஸ் சின்டிகேட் பிரிண்டர்ஸ் | 1377 புத்தகங்கள் | 468180/– |
| 2 | திருவாளர்.ஸ்ரீராஜேஸ்வரி பிரிண்டர்ஸ் | 1377 புத்தகங்கள் | 584100/– |
| 3 | திருவாளர்.கலர்விங்ஸ் பிரிண்டர்ஸ் லிமிடெட் | 1377 புத்தகங்கள் | 619500/– |

மேற்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளியில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திருவாளர்.கெக்சிங் சர்வீஸ் சின்டிகேட் பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாகவுள்ளதை அவசர அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்றத்தின் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் 2023-24 ஆம் நிதியாண்டிற்கு அலுவலக பயன்பாட்டிற்கு கணிணியில் பிரிண்ட் எடுக்க போதிய Toner-கள் இருப்பு இல்லாத காரணத்தினால் மேற்படி அலுவலக பணிகளில் தொய்வு ஏற்படாமல் இருக்க அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து 21.07.2023ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் அதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.Global Links என்ற நிறுவனத்திற்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மேற்படி செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | டோனர் விவரம் | விலைப்புள்ளிதாரர் பெயர்/முகவரி | Amount |
|---|---|---|---|
| 1 | 1)CANON NPG -67 | M/s.Global Links<br>No.2,ThirumalaiRoad,T.Nagar,<br>Chennai-17. | Rs.5450/- |
| | 2)Canon LBP2900 Model | | Rs.1200/- |
| 2 | 1)CANON NPG -67 | SS ENTERPRISES<br>N0.2New Street,Numbal,Chennai-600077 | Rs.7500/- |
| | 2)Canon LBP2900 Model | | Rs.1500/- |
| 3 | 1)CANON NPG -67 | BHARATH COMPUTERS<br>N0.24, Ghandhi Street,Velachery,Chennai-600042 | Rs.7700/- |
| | 2)Canon LBP2900 Model | | Rs.1850/- |

**அலுவலக குறிப்பு-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு நகரமன்ற உறுப்பினர்கள் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை அரசு/ பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டு எண் | வேலையின் பெயர் |
|---|---|
| 2 | 1) கிருபானந்தவாரியார் நகர் 2 வது தெருவில் புதிதாக குடிநீர் பைப்லைன் மற்றும் பழுதடைந்த தெருவிளக்கை புதிதாக 2 எண்ணிக்கை அமைத்து தரக்கோரியது, மற்றும் சர்வே எண்.79 குளம் மற்றும் மயான பூமி உள்ளது மற்றும் சர்வே எண்.67 மந்தவெளி புறம்போக்கு ஆகியவைகளை சர்வே செய்து நகராட்சி பயன்பாட்டிற்கு கொண்டு வரக்கோரியது.<br>2)இரகுநாதபுரம் கிராமத்தில் கிழக்குதெரு,மேற்குதெரு, வடக்குதெரு, தெற்குதெரு போன்ற பகுதிகளில் சிமெண்ட் சாலை அமைத்த 30 வருடங்கள் ஆகி உள்ளது. அதனை புதிதாக அமைத்து தரக்கோரியது<br>3)இரகுநாதபுரம் அம்பாள் நகர், கிழக்கு,மேற்கு வடக்கு,தெற்கு சாலைகள் மற்றும் அம்பாள் நகர் விரிவு சாலைகள் தார் சாலைகளாக அமைத்து தரக்கோரியது.<br>4)திருவள்ளுவர் சிட்டி பகுதி –2, அம்பாள் நகர்(விரிவு) சமயபுரம்,சூர்யா அவென்யூ,சீனிவாசா நகர்,<br>5)அசோக் அவென்யூ ஆகிய இடங்களில் குடிநீர் பைப்லைன் அமைத்து தரக்கோரியது<br>அசோக் அவென்யூ சர்வே எண்.63 partல் இருக்கும் பார்க்கில் புதிதாக வாட்டர்டேங்க் பைப்லைன்வசதி.<br>6) 2வது வார்டு பகுதியில் சமூகநலக்கூடம் மற்றும் சர்வே எண்.58 ல் சமுதாய நலக்கூடம் அமைத்து தரக்கோரியது. |
| 14 | ஜனனி நகர், பத்மாவதி நகர், ஸ்ரீ அம்பாள் சிட்டி பேஸ் –2 பகுதிகளில் சாலையை உயர்த்தி தார் சாலை அமைக்கவும் மற்றும் பத்மாவதி நகர் கோதண்டம் தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்து தரக்கோரியது. |
| 27 | அருணாச்சல நகர் குறுக்கு தெரு, தெரு லீலாவதி நகர் குறுக்கு தெரு மற்றும் இந்திரா நகர் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் |

**அலுவலக குறிப்பு :–** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நகராட்சி பொறியாளரால் கீழ்கண்ட பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | திருக்குளம் அருகில் குளியல் அறை மற்றும் toe wall, Revetment அமைத்தல் | 19.50 |
| 2 | மாங்காடு நகராட்சியில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் | 9.80 |
| 3 | சாந்தி நகர் மற்றும் கிருபானந்தவாரியார் பகுதியில் WMMஅமைத்தல் பணி | 7.00 |
| 4 | ரகுநாதபுரம் பகுதியில் WMMஅமைத்தல் பணி | 3.00 |

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பள்ளிகள், அங்கன்வாடி மையம், சமையலறைக்கூடம் மற்றும் பொது விநியோகக் கடை கட்டிடம் முதலான கட்டிடங்களுக்கு பராமரிப்பு பணிகள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகள் தொடர்புடைய நகராட்சி மூலமாக மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் விவரப்படியான பள்ளிகள் நகராட்சியிடம் ஒப்படைப்பு செய்தது ஏற்றும் மற்றும் பள்ளி கட்டிடங்களை சொத்தாக்கம் செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பள்ளியின் பெயர் |
|---|---|
| 1 | மாங்காடு ரகுநாதபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி |
| 2 | பட்டு மாங்காடு (இந்து) ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி |
| 3 | மாங்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி |
| 4 | பட்டூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி (முஸ்லீம்) |
| 5 | பட்டூர் ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப்பள்ளி |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.12**

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் திட்ட அனுமதி (எண்.OL-PP/NHRB/0350/2023 நாள் **05.09.2023**, PP.No.OL-00494, திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாங்காடு “ஆ” கிராமம் பழைய சர்வே எண்.**273/10**, புதிய சர்வே எண்.473/10A,473/11,473/12, 474/1A of 474/1A as per document) of சர்வே எண்.473/10A2,473/11B, 473/12B of 474/1A2 (As per Patta)**1416** ச.மீட்டர் மனை பரப்பளவில் மனை அபிவிருத்தியாளர் திருவாளர். ஸ்டெப்ஸ்டோன் புரமோட்டர்ஸ் என்பவருக்கு வாகன நிறுத்துமிடம் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் வசதியுடன் கூடிய **5** தளங்களில் உள்ள **42** குடியிருப்பு கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் திட்ட அனுமதியை தொடர்ந்து, இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டிட உரிம கட்டணங்களை (உட்கட்டமைப்பு கட்டணம் உட்பட) வசூலித்து திட்ட அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.13**

மாங்காடு நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் பூங்கா மற்றும் குளம் மேம்பாடு பணிகள் முடிக்கப்பட்டதை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு பணியினை மாண்புமிகு சிறு குறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் திறந்து வைக்கவேண்டியுள்ள வன்னியர்பட்டு குளம், திருக்குளம், திருவள்ளுவர் சிட்டி பூங்கா, ஏஆர்நகர் பூங்கா, மாருதி என்கிளேவ் பூங்கா ஆகிய இடங்களில் வாடகை அடிப்படையில் சீரியல் லைட் அமைக்கவும். சேர்மினார் பந்தல் போடவும் மேடை மற்றும் இதரபணிகள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் இதற்கான தோராய செலவினம் ரூ.3,15,000/– பொது நிதியிலிருந்த வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

மாங்காடு நகராட்சியில் 2022–23 கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் (KNMT) கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை டாக்டர் எம்.ஜி.ஆர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரவாயல், சென்னை–95 அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு அதற்கான உரிய மூன்றாம் நபர் சரிபார்ப்பு சான்று (Verification Certificate) வழங்கியது ஆய்வு கட்டணம் ரூ.103250/– தொகையினை பொது நிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.15**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட அருள்மிகு வெள்ளீஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் 01.09.2023 முதல் 04.09.2023 வரை கும்பாபிஷேகத்தை தரிசிக்க வரும் பொதுமக்கள் நலன் கருதி வாடகை அடிப்படையில் Portable Mobile Toilet அமைப்பது அவசியம் என்பதால் நகர் மன்றத்தன் ஒப்புதலை எதிர்நோக்கி நகர் மன்ற தலைவரின் ஒப்புதல் பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் இதற்கான செலவினம் பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.16**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எனது குப்பை என் பொறுப்பு , குடிநீர் சிக்கனம், டெங்கு நோய் மற்றும் பிளாஸ்டிக் விழிப்புணர்வு குறித்து பரணி ஸ்டேஜ் கலைக்குழுவினர் கொண்டு விழிப்புணர்வு நாடகம் நடத்தப்பட்டது. மேற்படி கலைக்குழுவின் பட்டியல் தொகை ரூ.14000/– வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.17**

மாங்காடு நகராட்சி வெள்ளதடுப்பு பணிக்காக உயர்மின் கம்பங்களை மாற்றி அமைக்க மின்வாரியத்திற்கு 4 காசோலைகள் மூலம் கடந்த 09/08/2023 அன்று தொகை வழங்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து வழங்கப்பட்ட தொகையிGST( சரக்கு மற்றும் சேவை வரி) விடுபட்டுள்ளது. எனவே GST Rs.1390/– ( சரக்கு மற்றும் சேவை வரி) தொகை மின்வாரியத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.18**

மாங்காடு கிராமம் கதவு எண்.7 பட்டூர், மாங்காடு திரு.சந்திரசேகர் என்பவர் மகளிர் எண்டர்பிரைசஸ் என்ற பெயரில் ஸ்டீல் பீரோ கம்பெனி நடத்தி வருகிறார், அந்த கம்பெனி இருக்கும் இடமானது குடியிருப்பு பகுதி என திரு.எஸ். நாகராஜ் என்பவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் மாசு கட்டுபாட்டு வாரியம் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாங்காடு நகராட்சி ஆணையர் அவர்களை பொறுப்பாக்கி வழக்கு தொடர்ந்துள்ளார். (W.P.No.2724/2019) மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக ஏற்று நடத்திட திரு.P.குருநாதன் உயர்நீதி மன்ற வழக்கறிஞரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கினை ஏற்று நடத்துவதற்கான வழக்காடு கட்டணம் ரூ.20000/– பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.19**

மாங்காடுநகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாகும் மற்றும் சென்னை பெருநகரத்தினை ஒட்டி உள்ள நகராட்சி என்பதால் நகரபொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்வது அவசியம் என்பதால் இந்நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட பல்வேறு பணியிடம் நிரப்பபடாமல் காலியாகவுள்ளதால் பிரிவு தொடர்பான பணிகள் அறிக்கைகள் மற்றும் பட்டியல் தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு இந்நகராட்சிக்கு மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் (Technical Assistant) தேவைப்படுகிறது. மேற்படி பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் (வெளிக்கொணர்வு முறையில்) பெற்று பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.20**

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம் (NUHM) திட்டதின் கீழ் நகராட்சி பகுதிகளில் நகர்ப்புற துணை சுகாதார நிலையங்கள் அமைத்து தடுப்பூசி , மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திட நகர்ப்புற துணை சுகாதார நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ.30.00 லட்சத்திற்கு திட்ட அனுமதி Mission Director National Health Mission Tamilnadu and Commissioner Maternal child health Chennai சென்னை அவர்களின் ந.க.எண்.1869/ NUHM/SHS/2015, Dt.3.08.2023 கடிதத்தின் படி அனுமதிக்கப்பட்டு கட்டிடம் கட்டுவதற்கான பணியினை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக மாங்காடு நகராட்சிக்கு 2023–24 ம் ஆண்டிற்கு ரூ.30.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பதிவிற்கும் மற்றும் பணிகளை மேற்கொள்ள அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–** மன்றம் பதிவு செய்யலாம் மற்றும் அனுமதிக்கலாம் .

**பொருள் எண்.21**

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் திட்ட அனுமதி (எண்.L1-0130/2023 நாள்.12.07.2023, ன்படி மாங்காடு ஆ கிராமம் சர்வே எண்.482/375எ 6070 ச.மீ மனைப்பிரிவில் 46 மனைகள் கொண்ட மனைப்பிரிவு திட்ட அனுமதி எண்.15530 PP.No.OL-215/2023, ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப் பிரிவில் 1850 ச.மீ சாலைகள் ( PP –1) ச.மீ திறந்த வெளி –1 மற்றும் (PP–2) 22ச.மீ திறந்தவெளி –2 அகிய இரண்டு திறந்தவெளிகள் தானபத்திரம் எண்.14303/2023ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் மனைப்பரிவிற்குக்கு சாலை ,மழைநீர் வடிகால், தெரிவிளக்கு ,குடிநீர் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்ப்படுத்துவதற்காக நகராட்சி பொறியாளர் மூலம் மதிப்பீடுகள் தயாரித்து மனை உரிமையாளரிடமிருந்து பெற்று நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டிட உரிமை தொகையினை மனை உரிமையாளரிடமிருந்து பெற்று மேற்கொண் மனைப்பிரிவினை ஒப்புதல் அளிக்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.22**

மாங்காடு நகராட்சியில் பொதுநிதி 2023–2024ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 18 | முத்துசாமி அவென்யூவில் தார்சாலை அமைத்தல் | 6.20 |
| 2 | 18 | முத்துசாமி அவென்யூ, 1வது, 2வது மற்றும் 1வது குறுக்கு தெருவில் தார்சாலை அமைத்தல் | 9.10 |
| 3 | 18 | காந்தி நகர் மெயின் ரோடு மற்றும் 1வது தெரு, 2வது தெருவிற்கு தார்சாலை அமைத்தல் | 13.75 |
| 4 | 18 | மேல்மாநகர் கிருஷ்ணா தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 8.10 |

| | | | |
|---|---|---|---|
| 5 | 17 | வேம்புலி அம்மன் கோயில் தெருவிற்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.00 |
| 6 | 17 | மாரியம்மன் கோயில் தெரு விரிவு 1வது 2வது தெரு தார்சாலை அமைத்தல் | 10.45 |
| 7 | 17 | மாரியம்மன் கோயில் குறுக்கு தெரு, 1வது குறுக்கு தெரு 2வது குறுக்கு தெரு மற்றும் ராமகிருஷ்ணாபுரம் குறுக்கு தெருக்களுக்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 19.15 |
| 8 | 23 | சி.எஸ்.ஐ பள்ளி சாலை மற்றும் குறுக்கு தெருவிற்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 14.30 |
| 9 | 23 | சின்னப்பா நகர் பிளாக் சாலை அமைத்தல் | 4.60 |
| 10 | 23 | கே.கே.நகர் 2வது மெயின் ரோட்டிற்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 10.25 |
| 11 | 6 | ராமகிருஷ்ணா அவென்யூ அம்பாள் நகர் 2வது தெருவிற்கு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 4.15 |
| 12 | 4 | மேற்கு மீனாட்சி நகர் மெயின் ரோடு மழைநீர் கால்வாய் அமைத்தல் | 10.20 |
| 13 | 4 | மேற்கு மீனாட்சி நகர் 1வது, 2வது குறுக்கு தெரு மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 15.70 |
| 14 | 5 | அடிசன் நகர் வெங்கடாஜலபதி தெருவில் தார்சாலை அமைத்தல் | 3.60 |
| 15 | 7 | வசந்தபுரம் 2வது தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 19.50 |
| 16 | 7 | மாருதி என்கிளேவ் பகுதியில் மழைநீர் கால்வவாய் அமைத்தல் | 6.00 |
| 17 | 8 | வசந்தபுரம் காளிகாம்பாள் தெருவில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 18.10 |
| 18 | 8 | வசந்தபுரம் காளிகாம்பாள் தெருவில் தார்சாலை அமைத்தல் | 19.45 |
| 19 | 15 | கீழ் ரகுநாபுரம் பொது சுகாதார கழிப்பிடம் பராமரிப்பு பணி செய்தல் | 1.80 |
| 20 | 16 | அப்பாவு நகர் பகுதியில் உள்ள பொது சுகாதார கழிப்பிடம் பராமரிப்பு பணி செய்தல் | 1.50 |
| 21 | 18 | முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படும் கட்டிடத்தில் குடிநீர் சுத்திகரிப்பு அமைத்தல் | 8.00 |
| 22 | 18 | லட்சுமி அவென்யூ, ஸ்ரீ ஹரி அவென்யூ இராமச்சந்திரா நகர், மாசிலாமணி நகர் அனெக்ஸ் பகுதியில் குடிநீர் குழாய் பதித்தல் | 3.50 |
| 23 | 27 | வாலாஜா தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.10 |
| 24 | 27 | கிழக்கு மசூதி தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 9.20 |
| 25 | 25 | பட்டூர் குளம் விடுபட்ட பகுதிகளில் கைப்பிடி அமைத்தல், பேவர் பிளாக் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல். | 16.00 |
| 26 | 2 | திருவள்ளுவர் சிட்டி பூங்கா மேம்பாடு பணி | 3.00 |
| 27 | 4 | திருப்பதி நகர் குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 9.90 |
| 28 | 4 | திருப்பதி நகர் குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | 3.60 |
| 29 | 26 | காயிதேமில்லத் நகர் 1வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 9.60 |
| 30 | 26 | காயிதேமில்லத் நகர் 1வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 6.60 |
| 31 | 18 | கணபதி நகர் பைப்லைன் அமைத்தல் | 1.50 |

மேலும் 2022–23 மற்றும் 2023–24ஆம் ஆண்டுகளில் பொதுநிதியில் ரூ.19.793 கோடியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே தற்போது நகராட்சியில் போதைய நிதி ஆதாரம் இல்லை. மேலும் அவசர அவசியத்தின் அடிப்படையில் நிதி நிலைக்கேற்ப பொது நிதியின் கீழ் அல்லது அரசு நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.23**

மாங்காடு நகராட்சியில் பொதுநிதி **2023–2024**ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | சாந்தி நகர் 1வது தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | **6.00** |
| 2 | சாந்தி நகர் 2வது குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | **9.10** |
| 3 | சிவந்தி நகர் மெயின் ரோடு மழைநீர் வடிகால் அமைத்தல் | **9.30** |
| 4 | சிவந்தி நகர் குறுக்கு தெரு மழைநீர் வடிகால் அமைத்தல் | **6.80** |

**அலுவலக குறிப்பு :–** மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.24**

மாங்காடு நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பின்வரும் விவரப்படியான சாலைகளை அவசர அவசியம் கருதி பழுதுநீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 10 வரை உள்ள சாலைகளை பழுதுநீக்கம் செய்தல் | **9.50** |
| 2 | வார்டு எண்.11 முதல் 20 வரை உள்ள சாலைகளை பழுதுநீக்கம் செய்தல் | **9.70** |
| 3 | வார்டு எண்.21 முதல் 27 வரை உள்ள சாலைகளை பழுதுநீக்கம் செய்தல் | **9.20** |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு ஸ்கார்பியோ வாகனம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி வாகனம் கொள்முதல் மற்றும் இன்ஸ்சூரன்ஸ் செலவின தொகை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.26**

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் கடிதம் எண்.L1/0129/2023 நாள்.**12.07.2023** ன்படி மாங்காடு ஆ கிராமம் சர்வே எண்.**482/375**B **6070**ச.மீ மனைபிரிவில் **42** மனைகள் கொண்ட மனைப்பிரிவு திட்ட அனுமதி எண்.15530 PPD /LO NO **214/2023** ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இம்மனைப்பிரிவில் **1870** ச.மீ. சாலைகள் (PP–1) திறந்தவெளி –1 மற்றும் (PP–2)21 ச.மீ திறந்தவெளி –2 ஆகிய இரண்டு திறந்தவெளிகள் தானப்பத்திரம் எண்,**14302/2023**ன்படி ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் மனைப்பிரிவிக்கு சாலை ,மழைநீர் வடிகால் , தெருவிளக்கு, குடிநீர் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்குக்காக நகராட்சி பொறியாளர் மூலம் மதிப்பீடுகள் தயாரித்து மனை உரிமையாளரிடமிருந்து பெற்று நகராட்சிக்கு செலுத்த கட்டிட உரிமத்தொகையினை மனை உரிமையாளரிடமிருந்து பெற்று மேற்காண் மனைப்பிரிவினை ஒப்புதல் அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.27**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நகரமன்ற உறுப்பினர்களின் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளைஅரசு / பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டு எண் | வேலையின் பெயர் |
|---|---|
| 3 | வடக்கு ரகுநாதபுரம் ,சிவந்தி நகர் மெயின்ரோடு, பிரியம் அவென்யூ மழைநீர் வடிகால்வாய் தூர்வாருதல்<br>சிவந்தி நகர் மற்றும் கணபதி நகர் பகுதியில் RO Plant அமைத்தல் பணி |
| 4 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 4வது வார்டு பகுதியில் 1,2,3 வது வார்டுகளில் இருந்து வரும் கழிவுநீர் 4 வார்டு பல தேங்கி நிற்பதால் நீர் ஆதாரங்களில் தண்ணீர் பாதிக்கப்படுகிறது அதனை சரி செய்யக் கோரியது. |
| 13 | 13 வது வார்டு பகுதியில் மழைநீர் தேங்காமல் சாலைகளை உயர்த்தி தருமாறு கோரியது |
| 14 | 14 வது வார்டு பகுதியில் RO Plant அமைத்தல் |
| 17 | 10 வது வார்டுக்கு உட்பட்ட சக்ரா நர் பகுதியில் சமுதாய நலக்கூடம் அமைத்து தரக்கோரியது மற்றும் திருமா நகர் தார் சாலை அமைத்தல் மாரியம்மன் கோயில்தெரு ராமகிருஷ்ணாபுரம் மற்றும் 3 மின் கம்பம் மற்றும் ஸ்ரீ கணபதி நகர் பகுதியில் 2 மின்கம்பம் அமைத்தல் பணி |
| 22 | 22வது வார்டு பகுதியில் பூங்கா சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பணி |
| 23 | கே.கே.நகர் பகுதி 2 வது குறுக்கு தெருவில் குடிநீர் பைப்லைனில் கழிவுநீர் கலந்து வருவதை சரிசெய்தல் பணி ,மற்றும் குடிநீர் பைலைன் 3 அடிபம்பு குழாள் மற்றும் 4 அடிப்பம்பு குழாய் சரி செய்ய கோரியது. |
| 27 | ஹாஜி அலி நகர் முதல் அப்தல் சமத் நகர் வளாகம் மற்றும் வி.எம்.எஸ். நகர் முதல் இந்திரா நகர் வரை மழைநீர் வடிகால் அமைத்தல் |

**அலுவலக குறிப்பு :–** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.28**

சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் திட்ட அனுமதி (எண்.OL-PP/INST/0025/2023 நாள் 25.08.2023, PP.No.OL-00472, திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாங்காடு கிராமம் , சர்வே எண்.16/2A &23/2A1,7000 ச.மீட்டர் மனை பரப்பளவில் மனை அபிவிருத்தியாளர் திருவாளர். ரிஷி கல்வி அறக்கட்டளை என்பவர் தரைதளம், முதல் மற்றும் இரண்டாம் தளத்துடன் கூடிய கல்வி வளாகம் கட்ட திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் திட்ட அனுமதியை தொடர்ந்து, இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டிட உரிம கட்டணங்களை (உட்கட்டமைப்பு கட்டணம் உட்பட) வசூலித்து கட்டிட வரைபட அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.29

மாங்காடு நகராட்சியில் 2022–2023ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 70 சாலைப்பணிகள் மற்றும் 2023–2024 பொது பொறிதியின் கீழ் 191 சாலைப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகள் நடைபெறும் சில பகுதிகளில் உள்ள சாலைகளில் தார்தளம் அமைக்க இயலாமல் குண்டும் குழியுமாக மழைநீர் தேங்கி இருப்பதால், பின்வரும் சாலைகளில் கப்பி தளம் அமைத்து பின் தார்தளம் அமைக்கவும் அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து பணிகள் மேற்கொள்ளவும், செலவினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1 | ரங்கநாதன் நகர் கப்பி சாலை அமைத்தல் | 1.60 |
| 2 | ஆஞ்சநேயர் கோயில் தெரு 2,3,4,5,6 தெருக்கள் கப்பி சாலை அமைத்தல் | 3.60 |
| 3 | வசந்தபுரம் மெயின் ரோடு கப்பி சாலை அமைத்தல் | 5.50 |
| 4 | காந்தி தெரு கப்பி சாலை அமைத்தல் | 1.30 |
| 5 | அப்துல்சமத் நகர், ஓ.ஏ.கே.தெரு, எஸ்.கே.எம்.நகர் 5வது தெரு கப்பி சாலை அமைத்தல் | 1.80 |
| 6 | தோப்பு தெரு கப்பி சாலை அமைத்தல் | 2.85 |
| 7 | தென்காலனி பொன்னம்பலம் நகர் கப்பி சாலை அமைத்தல் | 1.50 |
| 8 | நியூ காமாட்சி நகர் முதல் தென்காலனி மற்றும் காமாட்சி நகர் கப்பி சாலை அமைத்தல் | 1.90 |
| 9 | அம்பாள் சிட்டி சீனிவாசா நகர் கப்பி சாலை அமைத்தல் | 1.80 |

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்–30

மாங்காடு நகராட்சியில் பொதுநிதிப்பணிகள் 2023–2024ன் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 02.08.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது, நகராட்சி பொறியாளரின் ஒப்புநோக்கு பட்டியலின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கட்டிட வளாகம் சுற்றுசுவர் அமைத்தல் பணி | 400000 | திரு. அருண் | மதிப்பீடு தொகையை விட 0.05% குறைவு |
| | | | திருவாளர்.சற்குணா கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.15% அதிகம் |
| 2 | முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கட்டிட வளாகம் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 950000 | திரு. அருண் | மதிப்பீடு தொகையை விட 0.05% குறைவு |
| | | | திருவாளர்.சற்குணா கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.15% அதிகம் |
| 3 | எஸ். எஸ். கோயில் தெரு கல்வெர்ட் அமைத்தல் பணி | 600000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.09% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 1.12% அதிகம் |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.31**

மாங்காடு நகராட்சியில் பொதுநிதிப்பணிகள்2023—2024ன் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **09.08.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது, நகராட்சி பொறியாளரின் ஒப்புநோக்கு பட்டியலின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | அரிஅவென்யூ மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி பழுது பார்த்தல் பணி | 840000 | திருவாளர்.வசந்தம் எலக்ட்ரிக்கல்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.07%** குறைவு |
| | | | திருவாளர் எஸ்.வி.டி. பவர் ஓர்க்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.92%** அதிகம் |
| 2 | சக்ரா நகர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி பழுது பார்த்தல் பணி | 1000000 | திருவாளர்.வசந்தம் எலக்ட்ரிக்கல்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.07%** குறைவு |
| | | | திருவாளர் எஸ்.வி.டி. பவர் ஓர்க்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.75%** அதிகம் |
| 3 | பத்ரிமேடு மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி பழுது பார்த்தல் பணி | 840000 | திருவாளர்.வசந்தம் எலக்ட்ரிக்கல்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.07%** குறைவு |
| | | | திருவாளர் எஸ்.வி.டி. பவர் ஓர்க்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.90%** அதிகம் |
| 4 | பட்டூர் மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி பழுது பார்த்தல் பணி | 900000 | திருவாளர்.வசந்தம் எலக்ட்ரிக்கல்ஸ் | மதிப்பீடு தொகையை விட **0.07%** குறைவு |
| | | | திருவாளர் எஸ்.வி.டி. பவர் ஓர்க்ஸ் | மதிப்பீடு தொகையை விட **1.15%** அதிகம் |

<u>அலுவலக குறிப்பு—</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.32**

மாங்காடு நகராட்சியில் பொதுநிதிப்பணிகள்2023—2024ன் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள **21.07.2023**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிவரப்பெற்றுள்ளது, நகராட்சி பொறியாளரின் ஒப்புநோக்கு பட்டியலின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ காமாட்சி சிட்டி தார்சாலை அமைத்தல் | 800000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.04% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.59% அதிகம் |
| 2 | சாந்தி நகர் 3வது தெரு தார்சாலை அமைத்தல் | 280000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 3 | சாந்தி நகர் 2வது குறுக்கு தெரு தார்சாலை | 220000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | சாந்தி நகர் 1வது தெரு தார்சாலை அமைத்தல் | 280000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 5 | சாந்தி நகர் 3வது தெரு 1வது குறுக்கு தார்சாலை அமைத்தல் | 120000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 6 | விக்னேஷ் நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 920000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.42% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.95% அதிகம் |
| 7 | விக்னேஷ் நகர் 1வது தெரு தார்சாலை அமைத்தல் | **640000** | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.39% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.99% அதிகம் |
| 8 | விக்னேஷ் நகர் 2வது தெரு தார்சாலை அமைத்தல் | 360000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 1.12% அதிகம் |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.07%குறைவு |
| 9 | விக்னேஷ் நகர் 3வது தெரு தார்சாலை அமைத்தல் | 360000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.05% குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 1.10% அதிகம் |
| 10 | விக்னேஷ் நகர் 4வது தெரு தார்சாலை அமைத்தல் | 100000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.07%குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.82%அதிகம் |
| 11 | விக்னேஷ் நகர் 4வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 200000 | திரு. தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.09%குறைவு |
| | | | திரு. எம்.என். பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 1.05%அதிகம் |
| 12 | ஸ்ரீ மீனாட்சி நகர் தார்சாலை அமைத்தல் | 980000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 13 | பாலாஜி நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 640000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 14 | பாலாஜி நகர் தார்சாலை அமைத்தல் | 4100000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |
| 15 | மகாலட்சுமி நகர் 1வது குறுக்கு தெரு தார்சாலை | 130000 | ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை | |

<u>அலுவலக குறிப்பு–</u> ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் எண்–33

மாங்காடு நகராட்சியில் 2022–2023 பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 24.07.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிவரப்பெற்றுள்ளது, நகராட்சி பொறியாளரின் ஒப்புநோக்கு பட்டியலின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருப்பெரும்புதூர் தொகுதி MP Fund பட்டூர் பகுதியில் நியாய விலை கடை கட்டுதல் பணி | 1715000 | திரு. பி. சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.32% குறைவு |
| | | | திருவாளர். அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.25% அதிகம் |
| 2 | திருப்பெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திட்டப்பணி MP Fund மேல்ரகுநாதபுரம் அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 1450000 | திரு. பி. சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 1.15% அதிகம் |
| | | | திருவாளர். அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.41% குறைவு |

அலுவலக குறிப்பு– ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் எண்.34

மாங்காடு நகராட்சியில் பொதுநிதிப்பணிகள்2023–2024ன் கீழ் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 18.07.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிவரப்பெற்றுள்ளது, நகராட்சி பொறியாளரின் ஒப்புநோக்கு பட்டியலின் அடிப்படையில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| **1** | செல்வராஜ் நகர், நரிவனம் சாலை, ஆர்,எஸ்.ஆர். கார்டன் பைப்ரைன் அமைத்தல் | **500000** | கென்ஸ் டெக்னாலஜி | மதிப்பீடு தொகையை விட 0.29%குறைவு |
| | | | எச்.எ.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.12%அதிகம் |
| **2** | பாலாஜி அம்பாள் நகர் பைப் லைன் அமைத்தல் | 600000 | கென்ஸ் டெக்னாலஜி | மதிப்பீடு தொகையை விட 0.25%குறைவு |
| | | | எச்.எ.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.25%அதிகம் |
| **3** | சக்ரா நகர், சார்லஸ் நகர்,வசந்தபுரம் ,கே,கே,நகர், கிருபானந்தவாரியார் நகர் பைப் லைன் அமைத்தல் | 1000000 | கென்ஸ் டெக்னாலஜி | மதிப்பீடு தொகையை விட 0.32%குறைவு |
| | | | எச்.எ.கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.45%அதிகம் |

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.35**

**2023–2024**ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டம் மாங்காடு நகராட்சியில் சர்வே எண்.**505/1, 505/3** மற்றும் **504**ல் இடத்தில் புதிய பேருந்து நிலையம் ரூ.**6.40**கோடி மதிப்பீட்டில் அமைக்க வரப்பெற்று நிர்வாக அனுமதிக்கான அரசாணை **4** (D) எண்.**35** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**18.08.2023** மன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.36**

மாங்காடு நகராட்சியில் உள்ள நான்கு குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளில் குளோரினேஷன் பம்புகளை பழுதுநீக்கம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**300000/–**க்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.